மணிலாவுக்கு ஏற்ற மார்கழி பட்டம்

First Published : 22 Dec 2011 01:45:36 AM IST



உளுந்தூர்பேட்டை : மார்கழி மாதப் பட்டத்தில் மணிலா (நிலக்கடலை) பயிரிட்டால் கூடுதல் மகசூல் பெற்று லாபம் அடையலாம் என திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன், விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மணிலா விதைப்பு செய்ய ஏற்றப் பருவமான இந்த தருணத்தில் பின்வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மணிலா பயிரிட்டு கூடுதல் மகசூல் பெற்று லாபம் அடையலாம்.

தை மாதம் முதல் தேதிக்குள் மணிலா விதைப்பை செய்து முடித்திட வேண்டும். காற்றோட்டம் மற்றும் வடிகால் வசதி உள்ள செம்மண் மற்றும் இருமண் பாடுள்ள மண்வகை, மணிலா பயிரிட ஏற்றது.

நல்ல விளைச்சல் பெற வேண்டுமானால் நல்ல விதை அவசியம். சான்றுப் பெற்ற டி.எம்.வி.2,டி.எம்.வி.7, வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.3, வி.ஆர்.ஐ.ஜி.என்.5 ஆகிய ரகங்கள் இப்பருவத்துக்கு ஏற்றதாகும்.

சிறியப் பருப்பு விதைகள் ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோவும், பெரிய பருப்புகள் கொண்ட விதைகள் ஏக்கருக்கு 55 முதல் 60 கிலோ தேவைப்படும்.

விதை நேர்த்தி: விதைகளின் மூலமும், மண்ணின் மூலமும் பரவும் வேர் அழுகல் நோய், தண்டு அழுகல் நோய், இலைப்புள்ளி நோய் போன்றவற்றை கட்டுப்படுத்த ரசாயனப் பூச்சிக் கொல்லிகளான திராம் மற்றும் பாவிஸ்டின் ஆகியவற்றை ஒரு கிலோ விதைப் பருப்புக்கு 2 கிராம் வீதம் நன்றாக கலந்து 24 நேரம் வைத்திருந்து, பின்னர் விதைப்பது அவசியம்.

விதைப்பு செய்தல்: மண்ணின் தன்மை மற்றும் நீர்ப்பிடிப்புத் தன்மையை பொறுத்து, வயலை 3 அல்லது 4 முறை புழுதிப்படக் கட்டிகள் இன்றி சீராக உழுது, பாத்திக் கட்டுவது அவசியமாகும்.

உழவுக்கு முன் ஏக்கருக்கு 5 டன் மக்கிய குப்பைகளையோ அல்லது தொழு உரத்தையோ இடுவது மண் வளத்தையும், மகசூலையும் அதிகரிக்கும்.

விதைக்கும்போது வரிசைக்கு வரிசை ஒரு அடி அல்லது 30 செ.மீ., செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளியில் மட்டுமே விதைப்பு செய்ய வேண்டும். களைக்கொட்டு மூலம் விதைப்பு செய்வதாயிருந்தால் ஒரு சதுரமீட்டருக்கு 33 செடிகள் இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

இதைவிட செடிகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தால் மகசூல் கண்டிப்பாக குறையும். ÷

அடியுரம் இடுதல்: இறவை மணிலாவுக்கு கீழ்கண்ட அளவில் உரமிடுவது மிகவும் அவசியம். பயிரின் சீரான வளர்ச்சிக்கு தேவைப்படும் நைட்ரஜன் சத்தான யூரியாவை ஏக்கருக்கு 35 கிலோவும், வேர்களின் சீரான வளர்ச்சி மற்றும் காய்பிடிப்பை அதிகரிக்கும்.

மண் சத்தைத் தரும் சூப்பர் பாஸ்பேட் ஏக்கருக்கு 100 கிலோவும், பூச்சிநோய் தாக்குதலை தாங்கி வளரவும், வறட்சியைத் தாங்கி வளரவும், மகசூல் அதிகமாக உதவிடும். ÷சாம்பல் சத்தைத் தரும் பொட்டாஷுக்கு உரம் 40 கிலோவும் அடியுரமாக கடைசி உழவில் இடுவது மிகவும் நல்லது.

மேலும் கடைசி உழவின்போது, திரட்சியான பருப்புகளை உருவாக்கவும், எண்ணெய் சத்தை அதிகரிக்கவும் உதவிடும். ஜிப்சத்தினை ஏக்கருக்கு 80 கிலோ என்ற அளவில் இடுவது அவசியமாகும்.

பின்செய் நேர்த்தி: விதைப்புக்குப் பின், உயிர்நீர்ப் பாய்ச்சியும், பின் மண்ணின் தன்மைக்கு ஏற்ப சரியான இடைவெளியில் நீர்பாய்ச்ச வேண்டும்.

உரிய நேரத்தில் களையெடுத்துப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். இரண்டாம் களையின்போது ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை மேலுரமாக இட்டு, பின்னர் மண் அணைப்பது மகசூலை அதிகரிப்பதுடன், கம்பிகள் சீராக மண்ணில் இறங்கி அதிக எண்ணிக்கையில் காய்களாக மாறிட உதவும்.

பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் ஏற்பட்டால் வேளாண்மைத் துறை அலுவலர்களின் அறிவுரையின்படி, மட்டுமே பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அறுவடை: மணிலாச் செடியின் நுனி இலை மஞ்சளாக மாறி, அடி இலைகள் காய்ந்து உதிரும்போது காய்களின் உட்புறம் கரும்பழுப்பு நிறமாக மாறி இருக்கும்.

இந்த தருணமே அறுவடைக்கு ஏற்ற நேரமாகும். இந்தத் தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் நடப்பு மார்கழிப் பருவத்தில் கூடுதல் மகசூல் எடுக்கலாம்.

தற்போது அந்தந்த வேளாண் விரிவாக்க மையத்தின் சான்று பெற்ற விதை டி.எம்.வி.2 என்ற ரகம் விவசாயிகளுக்கு எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிலோவுக்கு ரூ.12 மானியத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பாதி விலையில் விதை கிராம திட்டத்திலும் விநியோகம் செய்யப்படுகிறது.

இதை விவசாயிகள் பெற்று பயனடையுமாறு திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நீடித்த உற்பத்தி முறையில் நவீன கரும்பு சாகுபடி**

First Published : 22 Dec 2011 01:47:16 AM IST



தருமபுரி: நீடித்த உற்பத்தியில் நவீன கரும்பு சாகுபடி என்ற புதிய அணுகுமுறை குறித்து, தருமபுரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கா. ராஜன், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் ந. மேகநாதன் ஆகியோர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி:

ஒரு விதைப்பரு சீவல்களில் இருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் நாற்றுக்கலை (25 முதல் 35 நாட்கள் வயது) எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளியில் நடவு செய்தல், தேவையான அளவு மட்டும் நீர்ப் பாய்ச்சுதல், இயற்கை சார்ந்த உரங்கள் இடுதல், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல், ஊடுபயிர் சாகுபடி மூலம் மண்வளம் மற்றும் மகசூல் அதிகரித்தல் ஆகியவையே நவீன கரும்பு உற்பத்தியின் கோட்பாடு.

**நாற்றங்கால்:** நீடித்த நவீன கரும்பு உற்பத்தி முறையில் ஒரு விதைப்பருவை கரும்பில் இருந்து அரை வட்ட வடிவில் வெட்டி எடுத்து, தரமான அச் சீவல்களைக் கொண்டு ப்ரோடிரே எனப்படும் குழித்தட்டுக்களில் மக்கிய தென்னை நார்க்கழிவை பயன்படுத்தி நாற்றங்கால் அமைக்கப்படுகிறது.

இதனால் அதிக அளவு முளைப்புத் திறனை, குறைந்த நாள்களிலேயே அடைய முடியும். இவ்வாறு அமைக்கப்பட்ட நாற்றங்காலில் நாற்றுகள் 25 முதல் 30 நாட்கள் வயது அடைந்தவுடன் வேர்ப் பகுதியில் உள்ள தென்னை நார்க் கழிவுடன் சேர்த்து நடவு செய்ய வேண்டும்.

அப்போது, கரும்பில் 4 முதல் 6 இலைகள் முளைத்திருக்கும். சாதாரண முறையில் 2 மாதங்களில் அடையப்படும் வளர்ச்சியை இம்முறையில் ஒரே மாதத்தில் எட்டுகிறது.

**நீர்ப்பாசனம்:** பயிர்நடவு செய்த 15 முதல் 30 நாள்களில் அல்லது 2 முதல் 3 பக்க சிம்புகள் வந்தபின் மண்ணில் இருந்து ஓர் அங்குல உயரத்தில் கவாத்து செய்யும் கத்தரி கொண்டு வெட்டிவிட வேண்டும். வெட்டுவதற்குமுன் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்காத விவசாயிகள், ஒரு தேக்கரண்டி அளவு யூரியா இட வேண்டும். சொட்டு உரநீர்ப் பாசனம் அமைத்துள்ள விவசாயிகள்

அதன் மூலம் உரம் அளிக்க வேண்டும். கரும்புக்குத் தேவையான நீரை சிக்கனமாக, பயிருக்கு வேண்டிய அளவு மட்டும் தினமும் அளிக்க வேண்டும். இதற்கு சொட்டு உரநீர் மிகவும் ஏற்றது.

இதை ஊக்குவிக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 75% மானியம் வழங்கப்படுகிறது. இம்முறையால் மண்ணில் எப்போதும் 60% ஈரமும், 40% காற்றும் உள்ளவாறு பராமரிக்கப்படுவதால் பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்கும். பயிருக்குத் தேவையான உரச் சத்தை பயிரின் வளர்ச்சி நிலைக்கேற்ப 210 நாள்கள் வரை அளிப்பதால், உர உபயோகத் திறன் அதிகரிப்பதோடு மகசூல் உயர்கிறது.

**நவதானிய உரப்பயிர்:** மண்ணாய்வு பரிந்துரையின்படி, உரமிட வேண்டும். பரிந்துரை இல்லாத பட்டத்தில், ஏக்கருக்கு 110 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 45 கிலோ சாம்பல் சத்து தரவல்ல ரசாயன உரங்களை அளிக்க வேண்டும். நிலத் தயாரிப்பின்போது தொழுஉரம் இடுவதாலும், நவதானிய உரப்பயிர்களை ஊடுபயிராக வளர்த்து மண்ணோடு உழுதுவிடுவதாலும் பயிருக்குத் தேவையான நூண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்கின்றன.

ஏக்கருக்கு சனப்பை, தக்கைப்பூண்டு தலா 2 கிலோ, எள் 200 கிராம், உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு தலா 1 கிலோ, கொத்தமல்லி, வெந்தயம், கம்பு தலா அரை கிலோ ஆகியவற்றை கலந்து, நடவு செய்த ஒருவாரம் கழித்து பார்களின் இடையே விதைக்க வேண்டும். பின்னர், 45 நாள்கள் கழித்து மடக்கி உழுது, மண் அணைக்க வேண்டும்.

**ஜீவாமிருத கரைசல்:** பயிருக்கு இயற்கையான ஊட்டச் சத்துக்களை அளிக்க, ஜீவாமிருத கரைசல் தயாரித்து 4 முதல் 5 முறை பயிருக்கு பாசன நீருடன் கலந்து இடலாம். இதனால், அதிக அளவு தழை, மணிச்சத்து கிடைக்கும். இதற்கு, பசுஞ்சானம் 20 கிலோ, வெல்லம் ஒரு கிலோ, கடலை மாவு ஒரு கிலோ, நல்லெண்ணைய் 200 மில்லி, பசு கோமியம் 5 லிட்டர், நுண்ணுயிர் உரம் 5 கிலோ, பயிர் சாகுபடி செய்துள்ள நிலத்தின் மண் அரை கிலோ ஆகியவற்றை ஒரு தொட்டியிலோ அல்லது டிரம்மிலோ 100 லிட்டர் தண்ணீரில் கலந்து நிழலில் வைக்க வேண்டும். தினமும் 2 (அ) 3 முறை நன்கு கலக்கிவிட வேண்டும். 5 நாள்களுக்குப்பின் இதை பாசன நீருடன் கலந்து பயிருக்கு அளிக்க வேண்டும். சாகுபடி காலத்தில் 4 (அ) 5 முறை இவ்வாறு அளிப்பது பலனளிக்கும்.

**சோகை உரித்தல் மற்றும் விட்டம் கட்டுதல்:** கரும்புப் பயிர் 5 முதல் 7 மாத பயிராக இருக்கும்போது சாதாரணமாக 30 இலைகள் வரை இருக்கும். பயிரின் மேற்பகுதியில் உள்ள 8 முதல் 10 இலைகள் மட்டுமே ஒளிச் சேர்க்கைக்கு பயன்படுகின்றன. மற்ற இலைகள் சத்தை உறிஞ்சுவதில் போட்டியிடுவதால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

எனவே, இந்த நேரத்தில் கீழ்ப்பகுதியில் உள்ள காய்ந்த இலைகளை, ஒளிச்சேர்க்கைக்குப் பயன்படாத இலைகளை உரித்து பார்களில் பரப்பி விடுவதால் பயிர் வளர்ச்சி நன்றாக இருப்பதோடு, மண்ணில் ஈரம் காக்கப்படுகிறது. களையும் கட்டுப்படுத்தப்படும். இதை 5 மற்றும் 7-வது மாதங்களில் செய்ய வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு, அறுவடை:** கரும்பில் தோன்றும் இளங்குருத்துப் புழு, இடைக்கணுப் புழு, வெள்ளை வேர்ப்புழு மற்றும் செவ்வழுகல் புழு, வாடல் நோய்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும். கரும்பு அறுவடைக்குத் தயாராகும் நேரத்தில் கரும்பை அடியோடு வெட்டி எடுக்க வேண்டும். இதற்குப் பொருத்தமான வெட்டுக்கத்தி (அ) வெட்டுக்கோடாரியைப் பயன்படுத்தலாம். இவ்வாறு வெட்டுவதன் மூலம், அதிக சர்க்கரை

சத்துள்ள அடிக் கரும்பு வெட்டப்படுவதால் கூடுதல் எடையுடன் சர்க்கரை கட்டுமானமும் கூடும். இந்த புதிய அணுகுமுறையைக் கையாண்டால், ஏக்கருக்கு 80 டன் கரும்பு வரை மகசூல் பெறலாம்.

**மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற விண்ணப்பிக்கலாம்**

First Published : 21 Dec 2011 01:09:40 PM IST

அரியலூர், டிச. 20: தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற விண்ணப்பிக்கலாம் என்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து பல் மருத்துவர், சித்த மருத்துவர், வாகனம், காலணிகள் தயாரித்தல் மற்றும் மின்சலவை இயந்திரம் போன்ற சுய தொழில்கள் தொடங்கவும், பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்திடவும், தாட்கோ மூலம் தொழில் முனைவோர் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

கடனுதவிப் பெற விரும்புவோர் மாவட்ட மேலாளர், தாட்கோ (இரண்டாவது தளம் - மாவட்ட ஆட்சியரகம்) அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத் துணை வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி விண்ணப்பத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**கோழித் தீவனத்தில் புரத அளவை குறைக்க அறிவுறுத்தல்**

First Published : 21 Dec 2011 12:17:06 PM IST

நாமக்கல், டிச.20:நாமக்கல் மாவட்டத்தில் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவுவதால், கோழித் தீவனத்தில் புரதத்தின் அளவை குறைக்க வேண்டும், என நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அம் மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை: அடுத்த மூன்று நாள்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையற்றும் காணப்படும். டிசம்பர் மாதம் 3-து வாரத்தை நெருங்குவதாலும், வடஇந்தியாவில் கடுங்குளிர் நிலவுவதாலும் பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் முறையே 28 டிகிரி செல்சியஸôகவும், 17 டிகிரி செல்சியஸôகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தட்பவெப்பத்தில் குளிர்ந்த காலநிலை நிலவுவதால், கோழிகளின் தீவன எடுப்பு அதிகரிக்கும். இருப்பினும், 60 வாரங்களான கோழிகள் இடும் முட்டைகளின் எடை அதிகரிக்கும். இதனால் முட்டை ஓட்டின் தரம் பாதிப்புக்குள்ளாகும். எனவே, முட்டை எடை அதிகரிக்கும்போது தீவனத்தில் புரதத்தின் அளவை 0.5 சதவீதம் வரை குறைத்து வழங்க வேண்டும்.

**முயல் வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி பெற முன்பதிவு செய்யலாம்**

First Published : 21 Dec 2011 01:02:40 PM IST

பெரம்பலூர், டிச. 20: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் டிச. 24 ஆம் தேதி (சனிக்கிழமை) முயல் வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி பெற முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வளாக பயிற்சிக் கூடத்தில் சனிக்கிழமை (டிச. 24) காலை 10 மணிக்கு குறைந்த முதலீட்டில், குறைந்த செலவில், குறுகிய காலத்தில் வருவாயை ஈட்டித் தரும் தொழிலாக விளங்கும் முயல் வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெற உள்ளது.

அறிவியல் ரீதியான முயல் வளர்ப்பு முறைகள் குறித்த பயிற்சியில், முயல் வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள சிறு, குறு விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் படித்து சுய தொழில் தொடங்க ஆர்வமுள்ள, முயல் வளர்ப்பில் ஈடுபட்டு நடத்திக் கொண்டிருப்பவர்கள் கலந்து கொள்ளலாம்.

இந்தப் பயிற்சியில் முயல் வளர்ப்பின் பயன்கள், முயல் இனங்கள், வளர்ப்புக்கென தரமான முயல் இனங்களை தேர்வு செய்தல், வீட்டமைப்பு, இடவசதி, ஆழ்கூல, கூண்டு முறை வளர்ப்பு முறைகள், அவற்றின் இட அளவு, பசுந்தீவன, கலப்பு தீவன பராமரிப்பு, தீவனம் தயாரித்தல் முறைகள், தீவனம் அளிக்க வேண்டிய அளவு, இனப்பெருக்கம், இனச்சேர்க்கை முறைகள், முயல்களைக் கையாளும் முறை, குட்டி போடுவதற்கான பெட்டி தயாரித்தல், நோய் பாதுகாப்பு முறைகள், இறைச்சியை மதிப்புக் கூட்டிய பொருளாக மாற்றுதல், முயல் வளர்ப்பு பொருளாதாரம், சந்தைப்படுத்துதல் மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகிய பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்ற நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே, இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், சுய உதவிக் குழுவினர், முயல் பண்ணை அமைக்க விருப்பமுள்ளவர்கள் தங்களது பெயரை ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328- 293592, 293251 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் அல்லது கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் மருத்துவர் பி. சிவகுமாரை 9443586301 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கழிவுநீரால் பயிர் நாசம்: விவசாயிகள் புகார்**

First Published : 21 Dec 2011 03:57:27 PM IST

திருவள்ளூர், டிச.20: விவசாய நிலங்களில் தனியார் தொழிற்சாலைக் கழிவு நீர் கலப்பதால் 25 ஏக்கரில் நடவு செய்யப்பட்டுள்ள பயிர்கள் கருகிவிட்டதாக ஆட்சியர் ஆஷிஷ் சாட்டர்ஜியிடம் விவசாயிகள் புகார் மனு கொடுத்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியை அடுத்த சின்னஓபுளாபுரம் கிராமத்தில் 60 ஏக்கர் பரப்பளவில் தனியார் தொழிற்சாலை சுமார் 3 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

இந்த ஆலையின் கழிவு நீர் சுற்றியுள்ள 25 ஏக்கர் நெற்பயிரில் விடப்படுகிறது. இதனால் நோய் தாக்குதலுக்குள்ளாகி பயிர்கள் கருகி வருகிறது. இதுகுறித்து ஊராட்சி நிர்வாகம் மற்றும் பேருராட்சி நிர்வாகத்தினரிடம் புகார் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதையடுத்து திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வந்த சின்னஓபுலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், வழக்குரைஞர் சீதாராமன் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்தனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**பெரிய வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி : சாலையில் கொட்டி விவசாயிகள் ஆவேசம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2011,00:58 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் பெரிய வெங்காயம் விலை வீழ்ச்சியால், எதிர்பார்த்த விலை கிடைக்காமல் விரக்கதியடைந்த விவசாயிகள் மூட்டை மூட்டையாக வெங்காயத்தை சாலையில் கொட்டியதால், பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காய்கறிகள், மலர்கள், வாழை, கீரை மற்றும் பழங்கள் உள்ளிட்ட தோட்டக்கலை துறை பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் வெங்காயம் சாகுபடியில் மாவட்டம் முழுவதும் விவசாயிகள் பரவலாக ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக ஓசூர் தாலுகாவில் பாகலூர், பேரிகை, அத்திமுகம், ராமச்சந்திரபுரம், புக்காசாகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் 260 ஏக்கரில் ஆண்டு முழுவதும் பெரிய வெங்காய சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு உற்பத்தியாகும் ஆயிரம் டன் வெங்காயம், கடந்த காலத்தில் சிங்கபூர், மலேசியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பாண்டு ஓசூர் தாலுகாவில் வெங்காயம் சாகுபடியில் விவசாயிகள், நல்ல விலையை எதிர்பார்த்து அறுவடை செய்த வெங்காயத்தை மூட்டை, மூட்டையாக குடோன்களில் அடுக்கி வைத்திருந்தனர்.

கடந்த ஒரு மாதமாக பெரிய வெங்காயம் விலை நாளுக்கு நாள் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக பெரிய வெங்காயம் உற்பத்தி அதிகரிப்பதால், தற்போது ஒரு மூட்டை வெங்காயம் 180 ரூபாய்க்கு கூட வாங்குவதற்கு ஆள் இல்லாமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். இதனால், குடோனில் வைத்திருந்த வெங்காய மூட்டைகளை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்தனர். சாகுபடி செய்த பணத்தை கூட எடுக்க முடியாததால், விவசாயிகள் விற்பனைக்காக குடோனில் வைத்திருந்த வெங்காய மூட்டைகளை சாலைகளிலும், திறந்த வெளியிலும் கொட்டி வருகின்றனர். ஓசூர் அருகே அத்திமுகத்தில், அப்பகுதி விவசாயிகள், நேற்று மூட்டை, மூட்டையாக வெங்காயத்தை சாலையில் கொட்டி தங்கள் அதிருப்தியை வெளிகாட்டினர். மேலும், அப்பகுதி பாலத்திற்கு அடியில் 30க்கும் மேற்பட்ட மூட்டைகள் விவசாயிகள் கொட்டி சென்றனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் வழங்கக்கோரி விவசாய சங்கத்தினர் உண்ணாவிரதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2011,01:35 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சை கலெக்டர் அலுவலகம் பனகல் கட்டிடம் முன் தமிழக விவசாயிகள் சங்கம், தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகள் சார்பில் உண்ணாவிரதம் இருந்தனர். தமிழக விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் செங்கொடிசெல்வன் தலைமை வகித்தார். முன்னாள் தமிழக விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் மணிமொழியன் உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி வைத்தார். தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னசாமி கோரிக்கைளை வலியுறுத்தி பேசினார். கரும்பு வெட்டு துவங்கிய நிலையில் உடனடியாக டன்னுக்கு மூன்றாயிரம் ரூபாய் விலை அறிவிக்க வேண்டும். நெல்லுக்கு குவிண்டாலுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். நேரடி நெல் நிலைய முறைகேடுகளை தடுத்து 22 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல் வரை எவ்வித பிடித்தம் இன்றி கொள்முதல் செய்ய வேண்டும்.
தடையின்றி 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். உரம் விலை நிர்ணயிப்பதை மத்திய அரசு ஏற்று கொள்ள வேண்டும். உயர்த்தப்பட்டுள்ள உர விலையை குறைக்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணமும், கடந்த ஆண்டுக்கான பயிர் காப்பீட்டுத் தொகையையும் உடனடியாக வழங்க வேண்டும்.
விவசாய உற்பத்தி பொருட்களை அடக்க விலைக்கு குறைவாக விற்பனை செய்வதன் காரணமாக ஏற்பட்டுள்ள, பொருளாதார இழப்புக்கு நிவாரணமாக அனைத்து விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடந்தது.

**சிறு விவசாயிகளுக்கு மானியத்துடன் வேளாண் கருவி: முதல்வருக்கு மனு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2011,00:41 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: "சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய நீண்ட கால தவணையில் வேளாண் கருவிகளை வழங்க வேண்டும்' என, முதல்வருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ., உலகநாதன் கோரிக்கை மனு அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியதாவது:

தமிழக கிராமப்புறங்களில் விவசாய தொழிலாளர்கள் தொழில் சார்ந்த லாபகரமான வேலையை செய்ய நகரங்களுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர். இதனால் பல்வேறு இன்னல்களுக்கும், கொத்தடிமையாக வாழும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் விவாயத்துக்கு தேவையான வேலையாட்கள் கிடைக்காத சூழ்நிலையும் ஏற்படுகிறது. சமூகத்தில் தொழிலாளர்களுக்கு மரியாதை இல்லாத நிலை ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கமாலும், இயற்கை சீற்றத்தின் காரணமாக நிலத்தை தரிசாக போடும் அவல நிலையும் ஏற்படுகிறது. இதனால் ரியல் எஸ்டேட் லாபம் கருதி விவசாய நிலங்கள் விற்பனையும் அதிகளவில் தொடர்கிறது.

இந்நிலையில் தமிழக முதல்வர் தொடக்க கூட்டு வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம், உணவு உற்பத்தியை பெருக்கிட, மான்யமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கவும், வேளாண் கருவிகள் குறைந்த வாடகையில் விவசாயிக்கு கிடைத்திட 80 கோடி வழங்கியுள்ளதுக்கு நன்றி தெரிவித்து கொள்கின்றோம்.மேலும், விவசாய தொழிலாளர் குடும்பத்தில் படித்த இளைஞர்கள், பெண்கள் சிறு, குறு விவசாயிகள் விவசாய தொழிலாளர்களுக்கு நீண்ட கால தவணையில் மானியத்துடன் வேளாண் கருவிகள் வாங்கிட நிபந்தனையின்றி கடன் வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2011,02:41 IST

கருத்தை பதிவு செய்ய

மோகனூர்: "விஷத்தன்மை கொண்ட பார்த்தீனியம் களைச்செடியை, ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தலாம்' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மோகனூர் வட்டாரத்தில், விஷத்தன்மை கொண்ட பார்த்தீனியம் களைச்செடி பரவலாக வளர்ந்து பரவியுள்ளது. இந்த களைச்செடிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

இவ்விதைகள் காற்று, நீர் மூலம் அனைத்து இடங்களுக்கும் எளிதாக பரவும். இக்களை செடியினால் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு பாதிப்பு உண்டாகும். இச்செடியால் அரிப்பு, ஆஸ்துமா போன்ற நோய்கள் உண்டாகும். விலங்குகள் இச்செடியை தின்னாத போதும் மற்ற புல்லுடன் சேர்ந்து உண்டால் விஷ பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, கோடை உழவு செய்வதன் மூலம் விதைகள் மற்றும் செடிகளை அழிக்கலாம்.

பூப்பதற்கு முன், செடிகளை கையுறை அணிந்து பிடுங்கி அழிக்க வேண்டும். சாதாரண உப்பு

(சோடியம் குளோரைடு) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 200 கிராம் கரைத்து தெளிக்கலாம். தரிசு நிலத்தில் உள்ள செடிகளை அழிக்க, 2.4டி 10 கிராம் அல்லது கிளைபோசேட் 10 மில்லி, அமோனியம் சல்பேட் 20 கிராம், சோப்பு கரைசல் இரண்டு மில்லி வீதம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். சோளம் மற்றும் கரும்பு பயிர் செய்த நிலங்களில் இக்களைச் செடி முளைக்காமல் தடுக்க, நான்கு கிராம் அட்ரசின் களைக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

**மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க 50 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2011,00:58 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி : தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுவதால் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த தகுதியானவர்கள் மீன் குஞ்சு பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம். கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை:

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2011-12ம் ஆண்டுக்கு மீன் வளத்துறையின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் 5 லட்ச ரூபாய் வழங்கும் திட்ட செயல்படுத்தப்படவுள்ளது. இதில், 10 லட்ச ரூபாய் மதிப்பில் ஆண்டுக்கு 100 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க உள்ள இடம், அதற்கு தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியேயும் இருக்க வேண்டும். நல்ல தரமான நிலத்தடி நீர் அல்லது ஆற்றுப் பாசனப் பகுதியில் மின் வசி, சாலை வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும். மீன்குஞ்சு மையம் புதியதாக அமைக்கப்பட வேண்டும். இரண்டு ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது பத்து வருட குத்தகை பெற்றிருக்க வேண்டும். தேவைக்கும் அதிகமான விவசாயிகள் விண்ணப்பித்தால் தேவைக்கும், தகுதிக்கு ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்த திட்டத்தில் சேர விருப்பம் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் "மீன் வள உதவி இயக்குனர், உள்நாட்டு மீன்வளம், எண் 5/727இ, 3வது குறுக்கு தெரு, பாரதி நகர், கிருஷ்ணகிரி' என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப படிவம் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். இது குறித்து மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் 04343-235745 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**உருளைக்கிழங்கை இருப்பு வைத்து விற்க விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,23:02 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : "உருளைக்கிழங்கை இருப்பு வைத்து, வரும் ஜன., பிப்.,ல் விற்றால், நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது' என, விவசாயிகளுக்கு வேளாண் பல்கலை அறிவுறுத்தியுள்ளது. உலகளவில் முக்கிய உணவுப் பயிரான உருளைக்கிழங்கு, ஏறத்தாழ 150 நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் 2010-11ல், உருளைக்கிழங்கு 18.95 லட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, 402 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த ஆண்டைவிட 10 சதவீதம் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு முக்கிய காய்கறியாக உட்கொள்ளப்படுகிறது. திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்ட மலைப்பகுதிகளில் பயிரிடப்படுகின்றன. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டில் 2010-11ல் 4,600 எக்டர் பரப்பில் 97,200 டன்கள் உற்பத்தியானது. இந்தியாவில் இருந்து 2010-11ல் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 407 டன்கள், உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டு ஏற்றுமதியைக் காட்டிலும், 26 சதவீதம் கூடுதலாகும். இந்தாண்டு செப்.,-அக்., மாதங்களில் சாகுபடி செய்யப்பட்டு, டிசம்பரில் அறுவடையாகும். இந்நேரத்தில், உருளைக்கிழங்குக்கு ஏற்றவிலை, உடனடி விற்பனை மற்றும் சேமித்து விற்பனை செய்வது குறித்து, விவசாயிகளிடையே கேள்விகள் எழுந்துள்ளன. தமிழ்நாடு வேளாண் பல்கலை வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின், உள்நாட்டு மற்றும் சந்தை தகவல் மையம், தமிழ்நாட்டின் முக்கிய உருளைக்கிழங்கு சந்தைகளான மேட்டுப்பாளையத்தில் உள்ள, நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நிலவிய 21 ஆண்டு விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வின்படி, உருளைக்கிழங்கின் விலை டிச.,2011ல் கிலோவிற்கு 14 முதல் 16 ரூபாய் வரை; ஜன.,2012ல் கிலோவிற்கு 15 முதல் 17 ரூபாய் விலை கிடைக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. பிப்.,2012ல் 19 முதல் 20 ரூபாய் வரை கிடைக்க வா#ப்புள்ளது. கோலார் உருளைக்கிழங்கு வரத்தால், பிப்.,15ல் இருந்து விலை குறைய வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் டிச.,2011ல் உருளைக்கிழங்கை சேமித்து வைத்து, ஜனவரி, பிப்., 2012ல் விற்றால் நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. பொங்கலின்போது, ஏற்றுமதி தேவையும் அதிகரிக்கும். பொங்கல் பண்டிகை மற்றும் பிப்.,15க்குள் விற்குமாறு, விவசாயிகளுக்கு வேளாண் பல்கலை பரிந்துரைத்துள்ளது.

**பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம்**

பதிவு செய்த நாள் : 12/22/2011 12:54:35 AM



புதுடெல்லி: உலக அளவில் பால் உற்பத்தியில் இந்த ஆண்டும் நம்நாடு தொடர்ந்து முதலிடம் பிடித்துள்ளது. இதுகுறித்து தேசிய பால் வளர்ச்சி வாரிய (என்டிடிபி) தலைவர் அம்ரிதா படேல் கூறியதாவது: கடந்த 2010&11ம் நிதியாண்டில் நாட்டின் பால் உற்பத்தி 12.1 கோடி டன்னாக அதிகரித்தது. இந்த அபரிமிதமான வளர்ச்சியால் உலகின் மொத்த பால் உற்பத்தியில் 17 சதவீதத்துடன் தொடர்ந்து நம்நாடு முதலிடம் பிடித்தது.

அதில் கூட்டுறவு பால் நிறுவனங்கள் மூலம் 96 லட்சம் டன் பால் பெறப்பட்டது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு சதவீதம் அதிகம். மேலும், கூட்டுறவு நிறுவனங்களின் திரவ பால் சந்தை மதிப்பு 4 சதவீதம் அதிகரித்து 82 லட்சம் டன்னானது. அறிவியல் ரீதியாக பால் மனிதர்களுக்கு சிறந்த உணவு என்ற கருத்தால், இதற்கான தேவை அமோகமாக உள்ளது என்று அம்ரிதா தெரிவித்தார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

கேரளாவுக்கு வாகனங்கள் செல்லாததால்

# ஊட்டியில் காய்கறிகள் விலை வீழ்ச்சி



ஊட்டி மார்க்கெட்டில் இருந்து வெளியூர்களுக்கு அனுப்ப காய்கறிகள் மூடைகள் கட்டி வைக்கப்பட்டிருந்த காட்சி.

ஊட்டி, டிச.22-

கேரளாவுக்கு காய்கறிகள் செல்லாததால் ஊட்டி யில் காய்கறிகளின் விலைகள் குறைந்து வருகிறது.

### காய்கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் கேரட், பீட்ரூட், முள்ளங்கி, உருளைக்கிழங்கு, பீன்ஸ், காளிபிளவர், முட்டைகோஸ், பட்டாணி போன்ற காய்கறிகள் விளைவிக்கப் படுகிறது. விவசாயிகளால் அறுவடை செய்யப்படும் காய்கறிகள் மேட்டுப்பாளை யம் காய்கறி மண்டிக்கும், ஊட்டி மார்க்கெட்டுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

ஊட்டி மார்க்கெட்டில் மொத்த வியாபாரிகள் ஏலம் மூலம் காய்கறிகளை விற்பனை செய்து, வெளிமாநிலங்களுக் கும், வெளியூர்களுக்கும் அனுப்பி வைக்கிறார்கள். ஊட்டியில் இருந்து கேரட், உருளைக்கிழங்கு, முள்ளங்கி, பட்டாணி போன்ற காய்கறி அதிக அளவு கேரளாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

### வாகன போக்குவரத்து நிறுத்தம்

இந்த நிலையில் முல்லை பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக தமிழக- கேரள எல்லையில் பதற்றம் நிலவு கிறது. மேலும் கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்தும், முல்லை பெரியார் அணையின் நீர் மட்டத்தை உயர்த்த கோரியும் தமிழ்நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. இதுமட்டுமின்றி கேரளா செல்லும் தமிழக வாகனங்கள் தாக்குப்படுவ தால், வாகன போக்குவரத்தும் நிறுத்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் இருந்து காய்கறி பாரம் கொண்டு செல்வது படிப்படியாக குறைந்து வருகிறது. இதனால் காய்கறி விலை தமிழ்நாட்டில் குறைய தொடங்கி உள்ளன. நீலகிரி மாவட்டம் கேரளாவின் எல்லையில் அமைந்துள்ளதால் நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறி கேரளாவுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. தற்போது முல்லை பெரியாறு பிரச்சினையால் காய்கறி அனுப்புவது பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஊட்டியில் காய்கறி களின் விலை வீழ்ச்சி அடைந் துள்ளது.

இது குறித்து நீலகிரி மாவட்ட இங்கிலீஸ் காய்கறி மொத்த வியாபாரி நாகராஜன் கூறியதாவது:-

ஊட்டி பகுதிகளில் விளைவிக்கப்படும் காய்கறிகள் கேரளாவுக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது. ஊட்டியில் இருந்து கேரளாவில் உள்ள திருச்சூர், எர்ணாகுளம், கோட்டையம், கோழிக்கோடு போன்ற பகுதி களுக்கு கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், பீன்ஸ், முள் ளங்கி, முட்டைகோஸ் போன் றவை அனுப்பி வைக்கப்படு கிறது. தற்போது முல்லை பெரியாறு பிரச்சினை காரண மாக காய்கறிகள் அனுப்புவது குறைந்து உள்ளது.

### பட்டாணி விலை சரிந்தது

இதன் காரணமாக ஊட்டியில் காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. மொத்த விற்பனையில் கடந்த மாதம் முள்ளங்கி ஒரு கிலோ ரூ.9, ரூ.10 என்றும் தற்போது கிலோ ரூ.2 மற்றும் ரூ.3 என விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கேரட் ஒரு கிலோ ரூ.25 என்று இருந்தது தற்போது ரூ.12 முதல் ரூ.15 வரையிலும், ஒரு கிலோ பீன்ஸ் ரூ.30க்கு விற்கப்பட்டது தற்போது ரூ.15 எனவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதே போல் ரூ.140க்கு விற் கப்பட்ட பட்டாணி தற்போது ரூ.40 என விற்பனையாகிறது. ஒரு துண்டு (45 கிலோ) உருளைக்கிழங்கு ரூ. 600 என்று விற்பனை யானது தற்போது ரூ.400க்கு தான் விற்பனை செய்யப்படு கிறது. இப்படி அனைத்து காய்கறிகளும் பாதிவிலைக்கு குறைந்து விட்டது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். விளைச்சல் அதிகம் கிடைத்த போதிலும் விலை இல்லாமல் அவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தக்காளி

இது தொடர்பாக நாட்டு காய்கறிகள் குறித்து மற்றொரு மொத்த வியாபாரி மூர்த்தி கூறியதாவது:-

முல்லைபெரியாறுபிரச்சினையின் காரணமாக சமவெளி பகுதிகளில் இருந்து நீலகிரி மாவட்டத்துக்கு வரும் தக்காளி, வெங்காயம் போன்ற வற்றின் வரத்தில் எந்தவித பாதிப்பும் இல்லை. விலை தான் குறைவாக உள்ளது. ரூ.20க்கு மேல் விற்பனையான தக்காளி தற்போது ரூ.8, ரூ.9 என விற்பனை செய்யப்படு கிறது. வெங்காயம் ரூ.12 முதல் ரூ.13 வரை விற்பனை செய்யப் படுகிறது.

மேலும் கருவேப்பிலை, பாகற்காய், வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் பனியின் காரணமாக மகசூல் குறைவடைந்துள்ளது. இதனால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பூ விலை குறித்து வியாபாரி ராஜா என்பவர் கூறும் போது, முல்லை பெரியாறு அணை பிரச்சினை பூ விலையில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்று கூறினார்.

# பத்து ஆண்டுகளில் வீணாகிய உணவு தானியம் 7 லட்சம் டன்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

தானே

கடந்த பத்து ஆண்டுகளில் வீணாகியுள்ள உணவு தானியங்களின் அளவு 7.42 லட்சம் டன் என இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ.331 கோடியாகும்.



## சேமிப்பு கிடங்குகள்

போதிய அளவு சேமிப்புக் கிடங்குகள் இல்லாததால் நெல், கோதுமை போன்ற தானியங்கள் திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தானியங்கள் வீணாகி விடுகின்றன. கடந்த 2000–01–ஆம் நிதி ஆண்டில் அதிகபட்சமாக 1.82 லட்சம் டன் தானியங்கள் வீணாகிப் போயின. இதன் மதிப்பு ரூ.67.52 கோடியாக இருந்தது. 2001–02–ஆம் நிதி ஆண்டில் 65,000 டன் அளவிற்கு தானியங்கள் வீணானது. எனினும் அடுத்த ஆண்டில் 1.35 லட்சம் டன் அளவிற்கு நெல், கோதுமை வீணாகிப் போனது. நடப்பு நிதி ஆண்டில் இதுவரை ரூ.3.40 கோடி கோடி மதிப்புள்ள உணவு தானியங்கள் வீணாகி உள்ளது என இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது.

சேமிக்கும் வசதி போதிய அளவு இல்லாததால் உற்பத்திப் பொருள்கள் பெருமளவு வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நபார்டு வங்கி நவீன சேமிப்புக் கிடங்குகளை உருவாக்குவதற்காக ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரக அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் தானிய கிடங்குகளுக்காக மட்டும் இதிலிருந்து கடன் வழங்கப்படும் என நபார்டு வங்கியின் செயல் இயக்குனர் எஸ்.கே. மித்ரா தெரிவித்தார்.

இந்த நிதியைக் கொண்டு நபார்டு வங்கி 8 சதவீத வட்டி விகிதத்தில் வங்கிகளுக்கு கடன் வழங்கும். அந்த வங்கிகள், சேமிப்புக் கிடங்குகளை நிர்மாணிக்க விரும்பும் தனியார் தொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்கும்.

## நடப்பு நிதி ஆண்டில்...

இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் – செப்டம்பர் மாத காலத்தில், இந்திய உணவு கழகத்தின் தானிய கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்த 87,000 டன் உணவு தானியங்கள் வீணாகியுள்ளதாக மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். காற்றிலுள்ள ஈரப்பதம், எலிகள், பறவைகளால் ஏற்பட்ட சேதம் மற்றும் கையாளுகையில் ஏற்படும் விரயம் போன்றவற்றால் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இழப்பை கட்டுப்படுத்த, கம்பி வேலி, மின் விளக்கு வசதி அமைத்தல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது. இழப்பு எல்லை மீறும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

# வேளாண்மை செய்திகள்

## கறவை மாடுகளுக்கு ஏற்படும் பாதிப்புகளும்-தீர்வுகளும்



பொதுவாக கறவை மாடுகள் சினையாக இருக்கும் போது கன்று கள் ஈனுவதற்கு முன்பாக பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன. அவ்வாறு ஏற்படும் பாதிப்புகளில் கருப்பை வாய் பிதுக்கம் ஒன்றாகும். இதை அடி தள்ளுதல், பூ தள்ளுதல், செவுளி தள்ளுதல், கமலம் வெளித் தள்ளுதல் என்றும் அழைப்பதுண்டு.

### கருப்பை வாய் பிதுக்கம்

கருப்பை வாயின் மேற்புறம், அடிப்புறம் மற்றும் பக்கவாட்டு பகுதியானது கமலத்துடன் சேர்ந்து அறையின் வழியாக, அதாவது யோனியின் வழியாக வெளியே தள்ளப்பட்டிருக்கும் நிலையே கருப்பை வாய் பிதுக்கம் ஆகும். இந்த நிகழ்வானது கறவை மாடுகளில் சினை காலத்தின் கடைசி 3 மாதங்களில் தான் அதிகமாக காணப்படுகிறது. ஏனெனில் இதுபோன்ற நிலைகளில் ஈஸ்ட்ரோஜன் என்னும் கன நீரானது நஞ்சுக்கொடியில் இருந்து சுரந்து கொண்டு இருக்கும். ஈஸ்ட்ரோஜன் கன நீர் இனப்பெருக்க குழாயின் பின் பகுதியில் உள்ள தசை நார்களை தளர்வடைய செய்துவிடும். யோனியில் உள்ள உட்புற மற்றும் வெளிப்புற உதடுகளானது பெரிதாவதோடு மட்டுமல்லாமல் தளர்ச்சியடைந்தும் காணப்படும்.

### காரணம் என்ன?

இதனால் கறவை மாட்டின் வயிற்றில் உள் அழுத்தம் அதிகமாக ஏற்பட்டு கருப்பை வாயானது வெளி தள்ளப்படுவதற்கு அதிகமாக வாய்ப்புகள் உள்ளன. இந்த கருப்பை வாய் பிதுக்கமானது பசு, எருமை மற்றும் ஆடுகளில் அதிகம் காணப்படும்.

இனப்பெருக்க குழாயில் ஏற்படும் புண்ணால் ஏற்படும் எரிச்சல், அதிகமுறை கன்று ஈன்ற கறவை மாடுகள், இனப்பெருக்க குழாய்களில் தசைகள் தளர்வடைந்து காணப்படுதல், மாடுகளை மேய்ச்சலுக்கு விடாமல் கட்டி வைத்திருத்தல், மாட்டின் வயிறு பகுதி அதிகமாக இறுக்கத்துடன் காணப்படுதல், இனப்பெருக்க பாதையில் அதிக கொழுப்பு இருத்தல், இனப்பெருக்க குழாய் உணர்ச்சியற்று இருத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் கருப்பை வாய் பிதுக்கம் பிரச்சினை ஏற்படுகிறது.

### சிகிச்சை-பராமரிப்பு

கருப்பை வாய் பிதுக்கம் ஏற்பட்டவுடன் கால்நடை டாக்டரிடம் கறவை மாடுகளை கொண்டு சென்று உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். கால்நடை டாக்டர் மூலமே சிகிச்சை அளிக்க வேண்டும். அனுபவம் இல்லாதவர்களை கொண்டு தறவான சிகிச்சை அளிக்க கூடாது.

கால்நடை டாக்டர் வருவதற்கு தாமதம் ஏற்பட்டால், கறவை மாடு வளர்ப்பவர்களே வெளித்தள்ளப்பட்ட பகுதிகளை 1 சதவீத பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு நன்றாக கழுவ வேண்டும். பிறகு கருப்பை வாய்ப்பகுதியானது உலர்ந்து போகாமல் இருக்க அதனை ஈர துண்டால் சுற்றிவிட வேண்டும்.

### பின்பற்ற வேண்டியவை

கட்டுத்தறியில் மாட்டின் மேற்புறத்தை விட 2 முதல் 6 அங்குலம் உயரமாக இருக்குமாறு, மேடு படுத்த வேண்டும். இதன்மூலம் முதல் நிலை, 2–ம் நிலை பிதுக்கமானது ஏற்படாமல் தடுக்கலாம். கால்நடை டாக்டரிடம் சிகிச்சை அளித்த பின்பு தீவனம், தண்ணீர் ஆகியவற்றை ஒரே நேரத்தில் கொடுக்காமல் 4 அல்லது 5 முறை கொஞ்சம், கொஞ்சமாக கொடுப்பது சிறந்தது. இவ்வாறு பராமரிப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம் கறவை மாடுகளை ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

## அதிக விளைச்சல் தரும் 'வாழை சாகுபடி'



இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் பழப்பயிர்களில் முக்கியமானது வாழை. இதன் பரப்பளவும், உற்பத்தியும் மாம்பழ சாகுபடிக்கு அடுத்த நிலையில் உள்ளது. இந்தியாவில் 7 லட்சத்து 8 ஆயிரத்து 800 எக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

### வாழை சாகுபடி

வாழைப்பயிரில் கிராண்ட் நைன், ரொபஸ்டா ஆகிய முக்கிய ரகங்கள் ஆகும். இந்த பழங்கள் பி வைட்டமின் சத்து கொண்டவை. இது ரத்த உற்பத்தி, ஹீமோகுளோபின் உற்பத்தியில் இரும்புச்சத்து நிறைந்த ஹீம் என்னும் பொருள் உற்பத்தியாக உதவுகிறது. சாம்பல் சத்து மற்றும் நார்ச்சத்து மிகுந்து காணப்படுகிறது.

வாழை சாகுபடியில் தற்போது நவீன திசு வளர்ப்பில் வாழை சாகுபடி செய்யும் முறையும் மிகவும் பிரபலம் அடைந்து வருகிறது. ஏனெனில் மற்ற வகைகளை காட்டிலும் திசு வளர்ப்பு வாழை 6 முதல் 8 அடி உயரம் கொண்டதாகவும், பசுமையானதாகவும் காணப்படுகிறது. இது நில எழில் ஊட்டுதலில் அதிக எண்ணிக்கையில் பயன்படுகிறது.

### தட்ப, வெப்ப நிலை

திசு வளர்ப்பு வாழை மரங்கள் புயலை தாங்கி நிற்கும் தன்மை கொண்டவை. ஒவ்வொரு மரத்தின் வாழைத்தாரும் சராசரியாக 50 கிலோ எடை கொண்டதாக இருக்கும். பழங்கள் வேகமாக பழுக்கும் தன்மையும், மிகுந்த சுவையும் கொண்டதாகும். நீண்ட நாட்கள் அழுகாமல் இருக்கும். 2 முதல் 3 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து உழவர்கள் மிகுந்த பயன்பெற்று வருகிறார்கள்.

தற்போது திசு வளர்ப்பு வாழை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். வாழை குளிர்ச்சியான மற்றும் தட்பவெப்ப நிலையில் வளரக்கூடியது. கரிசல் மண் மற்றும் மணல் தன்மை கொண்ட நிலம் நிலம் இந்தவகை வாழை சாகுபடிக்கு ஏற்றது. மண் மற்றும் வடிகால் வசதி உள்ள நிலம் சாகுபடிக்கு ஏற்றது.

### நடவு முறைகள்

நடவுக்கு முன் நிலத்தை முதலில் 2 முறை நன்கு உழுதுவிட்டு, 3 முறை நன்றாக கொத்திவிட வேண்டும். உழுதபின் சமன்செய்ய வேண்டும். ஆறு அடி நீளத்திற்கு பார் அமைக்க வேண்டும். குழிகளை அமைத்து நன்கு மக்கிய எரு உரமிட வேண்டும். குழிகளை தண்ணீர் விட்டு மண் நன்றாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். 5 முதல் 6 அடி வரை இடைவெளி விட்டு 6 இஞ்ச் ஆழத்தில் நட வேண்டும். தேவையான அளவு இயற்கை உரமும், 5 கிராம் போரேட், 200 கிராம் வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து ஒவ்வொரு குழிக்கும் இட வேண்டும். நாற்று நடும்போது 20 முதல் 25 கிலோ தொழு உரம், 5 கிலோ மரச்சாம்பலை இட வேண்டும். தென்னிந்தியாவில் அம்மோனியம் சல்பேட் முதல், 5–வது, 9–வது மாதத்தில் எக்டேருக்கு 20 கிலோ வீதம் எடுக்க வேண்டும். 3–வது மாதத்தில் 2 கிலோ புண்ணாக்கு இடுதல் அவசியம். பின்னர் பயிர்கள் நன்றாக வளரத்தொடங்கி காய்க்க தொடங்கியவுடன் வளர்ச்சி ஊக்கிகளை தெளிக்க வேண்டும். 3, 5, 7–வது மாதங்களில் ஜிங்க்சல்பேட், பெரஸ் சல்பேட், தாமிர சல்பேட், போராக் ஆகிய நுண்ணூட்டங்களை தெளிக்க வேண்டும்.

### அதிக விளைச்சல்

இதன் மூலம் விளைச்சல் மற்றும் தரமான காய்கள் காய்க்கும். கிழங்கு கூன்வண்டு, தண்டு கூன் வண்டு, அசுவிணி, இலைப்பேன், நூற்புழு ஆகிய பூச்சி தாக்குதல்களையும், இலைப்புள்ளி நோய், முடிக்கொத்து நோய் பனாமா வாடல்நோய், கொட்டவாழை ஆகிய நோய்களையும் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை தெளிக்க வேண்டும். அறுவடை 12 முதல் 15 மாதங்களில் வாழை அறுவடைக்கு தயாராகிவிடுகிறது. எக்டேருக்கு 26 ஆயிரம் முதல் 55 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் கிடைக்கும்.

## அறுவடை செய்த உருளைக்கிழங்கை சேமித்து வைத்து விற்பனை செய்யலாம்

உலக அளவில் முக்கிய உணவுப் பயிராக உருளைக்கிழங்கு ஏறத்தாழ 150 நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் நடப்பு ஆண்டில் உருளைக்கிழங்கு 19 லட்சம் எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 402 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டு உற்பத்தியை ஒப்பிடும் போது 10 சதவீத அதிகரித்து உள்ளது.

தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மலைப்பகுதிகளில் மட்டுமே உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. தேசிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின் படி தமிழகத்தில் நடப்பு ஆண்டில் சுமார் 4,600 எக்டேர் பரப்பளவில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு 97,200 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

### சேமித்து விற்பனை

தமிழகத்தில் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விவசாயிகள் விதைத்த உருளைக்கிழங்கு தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. இவ்வாறு உள்ள உருளைக்கிழங்கை அறுவடை செய்தால் அதற்கு நல்ல விலை கிடைக்குமா மற்றும் அறுவடை செய்த உருளைக்கிழங்கை சேமித்து விற்பதா அல்லது உடனடியாக விற்பதா என்ற சந்தேகங்களை விவசாயிகள் எழுப்பி உள்ளனர்.

இவர்களுக்கு விடையளிக்கும் விதத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் தமிழ்நாட்டின் முக்கிய உருளைக்கிழங்கு சந்தையான மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 21 ஆண்டுகாலமாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது.

### ஏற்றுமதி தேவை

ஆய்வு முடிவுகளின் படி உருளைக்கிழங்கின் விலை நடப்பு மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.15 வரையும், வருகிற ஜனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.15 முதல் ரூ.17 வரையும் விலை கிடைக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது. பிப்ரவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.19 முதல் ரூ.20 வரை விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் கோலார் உருளைக்கிழங்கின் வரத்தால் பிப்ரவரி மாதம் 15–ந் தேதியில் இருந்து விலை குறைய வாய்ப்பு உள்ளது.

நடப்பு மாதத்தில் அறுவடை செய்யும் உருளைக்கிழங்கை சேமித்து வருகிற ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் விற்றால் நல்ல விலை கிடைக்கும். மேலும் பொங்கல் பண்டிகையின் போது ஏற்றுமதித் தேவை அதிகரிக்கும். எனவே பொங்கல் பண்டிகை மற்றும் பிப்ரவரி மாதம் 15–ந் தேதிக்குள் விற்பனை செய்யலாம்.

இந்த தகவலை கோவை வேளாண் பல்கலைக்கழகம் தெரிவித்து உள்ளது.